தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 8-9-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மத மூட நம்பிக்கைகள் கண்தான விழிப்புணர்வுக்குத் தடையாக உள்ளது – கண் மருத்துவர் தகவல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் சங்கரா கண் மருத்துவமனையுடன் இணைந்து 7-9-2015 மாலை பல்கலைக்கழக அண்ணா அரங்கில் கண்தான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஆகஸ்டு 25 முதல், செப்டம்பர் 8 வரை கண்தான விழிப்புணர்வு ஆண்டுதோறும் இருவாரங்களுக்கு அனுசரிக்கப்படுகிறது. 250 முதலாமாண்டு நாட்டு நலப்பணித்திட்ட மாணவ மாணவியர், நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. அமுதா, நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் குரு, முனைவர் லதா, முனைவர் ஹேமாவதி மற்றும் முனைவர் சக்திவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் பல்கலைக்கழகம் சார்பில் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மைர் முனைவர் ச. மகிமைராஜா அவர்கள் தனது தலைமையுரையில் தமிழகம் கண் தானத்தில் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. கண், இரத்தம், உறுப்பு தானத்தில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் முன்னோடியாகளாகத் திகழ வேண்டும் என்றார். ஒரு நிமிடம் அனைவரையும் கண்களை மூடச்சொல்லி கண்ணில்லாதவர்கள் அனுபவிக்கும் வேதனையை உணரச் செய்தார்.

சங்கரா கண் மருத்துவமனை கண் மருத்துவர் தஜத் கபூர் அவர்கள் கண் வங்கி குறித்தும், கண்ணை அகற்றும் முறை, செயற்கை கண் பொறுத்துவது குறித்த தகவல்களைக் கூறினார். மதம் சார்ந்த மூடநம்பிக்கைகளை முறியடித்து அனைவரும் கண்

தானம் செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கண் இல்லாத சடலம் சொர்க்கத்துக்குச் செல்லாது என்று தவறான மூடநம்பிக்கைகளை சில மதங்கள் பரப்புகின்றன. இளைஞர்கள் மாற்ற முற்பட வேண்டும் என்றும் கூறினார். தொடர்ந்து மாணவர்களுக்கு பதிலளித்தார்.

விழாவில் சங்கரா கண் மருத்துவமனை மக்கள் தொடர்பு அலுவலர் திரு. விக்னேஷ்வரன் அவர்கள் மற்றும் கண் தான ஏசி அறக்கட்டளை தலைவர் திரு. அருணாச்சலம் ஆகியோர் பங்குபெற்றனர்.

முன்னதாக நாட்டு நலப்பணித்திட்ட மாணவி செல்வி. கீர்த்தனா அவர்கள் வரவேற்புரையும், செல்வி. தனலட்சுமி அவர்கள் நன்றியுரையும் ஆற்றினார்கள்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்